தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை

2010-2011

தமிழ் நாடு அரசு அச்சுத்துறை ஆணையரால் தமிழ்நாடு அரசுக்காக அச்சிடப் பெற்றது

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2010 - 2011

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2010-2011

பொருளடக்கம்

வரிசை எண்.	பொருள்	பக்கம்
(1)	(2)	(3)
1	செயல்களும் கடமைகளும்	1-5
2	நேரடித் தெரிவுகள்	6
3	தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை	6
4	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன	7-9
5	தெரிவுத் தேர்வுகள் அல்லாத இதர தேர்வுகள்	10
6	அரசும் தேர்வாணையமும்	11-15
	பின் இணைப்புகள்	
1	தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்	17
2	நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட புள்ளி விவரம்	18-21
3	வருவாய் மற்றும் செலவு	22
4	வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்	23-24
5	எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்	25-30
6	பொருத்தமும் தகுதியும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம்	31-32
7	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள்	33-37
8	ஒழுங்கு நடவடிக்கைகள். மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம்	38-39
9	தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதன் விவரம்	40-42
10	தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம்	43
11	1930 முதல் தற்சமயம் வரை உள்ள தேர்வாணைய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் விவரம்	44-49
12	அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாத நிகழ்வுகள் குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம்	50
13	வரைபடங்கள்	51-52

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை 2010-2011

முன்னுரை :-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 315-இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர் பதிநால்வர் என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். தற்போது தலைவரும், பதிநான்கு உறுப்பினர்களும் உள்ளனர்.

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

திரு. அரங்க. செல்லமுத்து, இ.ஆ.ப.(ஓய்வு)	தலைவர்
திருமதி.பா. நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்., (15.06.2010 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
திருமதி. நீ.கு. கலைச்செல்வி, பி.எஸ்.சி., பி.எல்., (15.06.2010 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
பேராசிரியர். ஆர். சுப்பிரமணியன், பி.எஸ்.சி., எம்.எல்., (26.06.2010 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
திருமதி. சி.டி. திலகவதி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பி.ஜி.டி.ஜே.எம்.சி., (24.08.2010 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
டாக்டர். ரெ. நாராயணசாமி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., (10.12.2010 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார்)	உறுப்பினர்
திரு. மு. இராமசாமி , எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. த. சங்கரலிங்கம், பி.எஸ்.சி. பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர். கி. லெட்சுமணன், எம்.காம்., ஏ.சி.எஸ்.,(இன்டர்) எம்.பிஃல்., பிஎச்.டி.,	உறுப்பினர்
திருமதி. மா.சோபினி, எம்.ஏ.,	உறுப்பினர்
திரு. முகமது அலி ஜின்னா, பி.இ.,	உறுப்பினர்
டாக்டர். சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பிஃல், பிஎச்.டி.,	உறுப்பினர்
டாக்டர். கே. மு. இரவி, எம்.ஏ.,எம்.எல், ஏ.சி.எஸ்(இறுதி), பிஎச்.டி.(சட்டம்)	உறுப்பினர்

திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு.கே.கே.இராஜா, எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ், டி.சி.எச். (24.02.2011 அன்று பணியேற்றார்)	உறுப்பினர்
திரு. வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி; பி.எட்; எம்.பி.எ. (23.02.2011 அன்று பணியேற்றார்)	உறுப்பினர்
டாக்டர். பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி, எம்.எட்; பிஎச்.டி (28.02.2011 அன்று பணியேற்றார்)	உறுப்பினர்
திரு. த.குப்புசாமி பி.எஸ்.சி; பி.ஜி.எல்; (23.02.2011 அன்று பணியேற்றார்)	உறுப்பினர்
திரு. க.செல்வமணி பி.எஸ்.சி; பி.எல்;டி.பி.பி.எ; (23.02.2011 அன்று பணியேற்றார்)	உறுப்பினர்

திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப.,	செயலாளர்
திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப.	தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்

மார்ச் 31, 2011 இன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு-1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி-1

செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடி தெரிவுகள்

1. முதல் நிலைத் தேர்வு

தேர்வுகளின் எண்ணிக்கை	:	1
காலியிடங்களின் எண்ணிக்கை	:	61
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	98,682

2. முதன்மை எழுத்துத் தேர்வு :-

தேர்வுகளின் எண்ணிக்கை	:	19
காலியிடங்களின் எண்ணிக்கை	:	5,789
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	15,55,676

3. நேர்முக தேர்வு :-

தேர்வுகளின் எண்ணிக்கை	:	17
காலியிடங்களின் எண்ணிக்கை	:	4,775
தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள்	:	7,419

4. இறுதியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை	:	11
காலியிடங்களின் எண்ணிக்கை	:	3,466
இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	:	3,226

II. இதர தேர்வு விவரங்கள்

1. துறைத் தேர்வு - 2010

விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை	:	1,87,573
தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை	:	1,35,459
வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை	:	69,393

2. அரையாண்டுத் தேர்வு

2010 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை:145

2011 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 126

3. கல்வி தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 9

4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 1165 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல் - அமைச்சுப் பணியில் : 42 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம்தன் கருத்துகளைத் தெரிவித்த வழக்குகள் : 346 நேர்வுகள்.

7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட இசைவு அளிக்கப்பட்டவை : 623 நேர்வுகள்

8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

வரவு	.....	11,17,75
செலவு	.....	31,35,41

வரவு மற்றும் செலவின விவரங்கள் பின் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 66 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை கோரி 14 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 11,549, விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 16,84,745 ஆகும். இதன் விவரங்கள் பின் இணைப்பு-4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பின் இணைப்பு -13ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும் தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகிறது.

பகுதி-2

நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 11 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 3,466 காலியிடங்களுக்கு இறுதியாக 3,226 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது. இறுதி முடிவு செய்த 11 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பின் இணைப்பு - 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் நிலைத் தேர்வு

அறிக்கைக்குரிய ஆண்டில் தொகுதி-I பணிக்கு முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட்டது. 61 காலியிடங்களுக்கு 98,682 விண்ணப்பதாரர்கள் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 5789 காலியிடங்களை நிரப்புவதற்கு 19 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 15,55,676 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

வாய்மொழி தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 4,775 காலியிடங்களை நிரப்ப 17 பதவிகளுக்கு வாய்மொழி தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 77 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 7 குழுமங்கள் முற்பகலும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 461 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 7,419 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய ஆண்டில் நடந்த முதல்நிலை, முதன்மை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய் மொழித் தேர்வுகளின் விவரங்கள் பின் இணைப்பு-5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி-3

தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பதவிகள் :

அறிக்கைக்குறிய ஆண்டில் 240 காலியிடங்களுக்கு தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படவில்லை. அவை பின்வறுமாறு:- உதவி மருத்துவ அலுவலர் (யுனானி)-22, உதவி மருத்துவர்(பொது மற்றும் சிறப்புப்பிரிவு)-217, உந்தூர்தி ஆய்வாளர் நிலை-II-1. இதன் வகுப்பு வாரியான விவரங்கள் பின் இணைப்பு - 6 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி -4

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநில பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 23 பணிகளில் 1165 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:

அ I. செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் : 1385

II. (i) தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் : 795

(ii) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் : 158

(iii) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. : 22

(iv) சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் : 410

III. வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் : 16

ஆ I) அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் :346

II) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் : 148

III) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் : 198

மேல்முறையீட்டு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு ஆகியவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள்கொண்ட வழக்குகள் என 346 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு-8ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 623 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. இரண்டு நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

வரிசை எண் (1)	பணி வகை (2)	இசைவு அளிக்கப்பட்டவை (3)	இசைவு மறுக்கப்பட்டவை (4)
1.	மாநிலப் பணி	4	1
2.	சார்நிலைப்பணி	22	-
3.	அமைச்சுப்பணி	597	1
	கூடுதல்	623	2

எப்பணிகளில் எந்தெந்தப் பதவிக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் துறை வாரியாக பின் இணைப்பு -9ல் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டவாறு நடப்புக்குரிய ஆண்டில் தற்காலிக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்தது மற்றும் மறுத்துள்ளது.

காலம் (1)	இசைவு அளிக்கப்பட்டது		இசைவு மறுக்கப்பட்டது	
	மாநிலப் பணிகள் (2)	சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (3)	மாநிலப் பணிகள் (4)	சார்நிலை/ அமைச்சுப் பணிகள் (5)
3மாதங்களுக்குமேல்12 மாதங்களுக்குள்	-	1	-	-
12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள்	-	-	-	-
18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	-	-	-	-
24 மாதங்களுக்கு மேல்	-	-	-	-
கூடுதல்	-	1	-	-

24 மாதங்களுக்கு மேலும் எந்த நிகழ்விலும் தற்காலிக நியமனம் தொடர தேர்வாணையம் இசைவு அளிக்கவில்லை.

5. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 20(எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 42 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:

அரசால் 86 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 74 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 12 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு சட்ட பிரிவுக்கூறு 320(3) இன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதிகள் தளர்த்தப்பட்டவை:

அறிக்கைக்குரிய ஆண்டில் 9 நேர்வுகளில் வயது அல்லது கல்வி தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

பகுதி -5

தெரிவு தேர்வுகள் தவிர இதர தேர்வுகள்

1) துறைத்தேர்வுகள்

2010-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 331 தாட்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,87,573 நபர்கள் விண்ணப்பித்தனர்.

வ.எண்.	விவரம்	மே - 2010	டிசம்பர்-2010
1.	மொத்த பாடங்கள்	74	73
2.	தேர்வு தாட்களின் எண்ணிக்கை	167	164
3.	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	94,654	92,919
4.	தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை	68,539	66,920
5.	தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை	34,181	35,212
6	தேர்ச்சி சதவீதம்	50	53

2) அரையாண்டு தேர்வுகள்:-

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழி தேர்வு செப்டம்பர் 2010 மற்றும் மார்ச் 2011-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 145 மற்றும் 126 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

3) டேராடுன் இந்திய பாதுகாப்புக்கல்லூரி பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2010 மற்றும் பிப்ரவரி 2011-ல் நடத்தியது. அதில் 49 மற்றும் 37 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.

பகுதி-6

அரசும் தேர்வாணையமும்

அ. தேர்வாணையக் கருத்தை அரசு ஏற்காமை:-

அறிக்கைக்குரிய ஆண்டில், அரசு, தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து மூன்று வழக்குகளில் மாறுபட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:-

வழக்கு-1

(அரசாணை (டி) எண்.1188, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 06.11.2009.)

டாக்டர்.E.கீதா, (மனுதாரர்) தலைமைச் செயலக மருத்துவமனையில் முதுநிலை உதவி அறுவை மருத்துவர் ஆக பணிபுரிந்த போது இரண்டு தலைமைச் செயலக ஊழியர்களுக்கு மேம்போக்காக மருத்துவச் சான்றிதழ் வழங்கியதற்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(அ)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. வரையறுக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றியபின், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குறைபாடுகளும் நிரூபணமாவதாக முடிவு செய்து நிரூபணமான குறைபாடுகளுக்கு தண்டனையாக மனுதாரரின் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஓராண்டிற்கு நிறுத்தி வைத்து ஆணை பிறப்பித்தார். இத்தண்டனை ஆணையினை எதிர்த்து மனுதாரர் அரசுக்கு மேல்முறையீடு செய்தார். அரசு, அம்மேல்முறையீட்டினை தேர்வாணையத்தின் ஆலோசனைக்கிணங்க தள்ளுபடி செய்து ஆணையிட்டது. இதனையடுத்து மனுதாரர் தனது மனுவினை அரசுக்கு சமர்ப்பித்தார். அரசு இம்மனு மீது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய 1954ம் ஆண்டின் ஒழுங்குமுறை விதிகளில் விதி 19ன் கீழ் தேர்வாணையக் கருத்தினை மீண்டும் கோரியது. இந்நேர்வு தொடர்புடைய

ஆவணங்களை மீண்டும் கவனமுடன் ஆய்வு செய்த தேர்வாணையம் மனுதாரர் சரியாக விசாரிக்காமலும் கவனமாக ஆராயாமலும் மேம்போக்காக மருத்துவச் சான்றிதழை வழங்கியுள்ளார் என்பதை கண்டறிந்தது. எனினும் மனுதாரரின் 18 ஆண்டு கால சேவை மற்றும் அவர் மீது தொடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையால் அவருக்கு ஏற்பட்ட மன உளச்சல் ஆகியவைகளைக் கருத்திற் கொண்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட திரண்ட பயனின்றி ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை மாற்றியமைத்து ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனின்றி 6 மாதத்திற்கு வழங்கிட தேர்வாணையம் தனது ஆலோசனையை அரசுக்கு வழங்கியது. ஆனால், அரசு, தேர்வாணைய கருத்தினை ஏற்காமல், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து அரசுஆணை எண்.1188, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 06.11.2009 வாயிலாக ஆணை பிறப்பித்தது. இவ்வழக்கில் தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து அரசு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

<u>வழக்கு-2</u>

(அரசாணை பல்வகை எண்.344, உள்(SC)துறை, நாள் 01.04.2010.)

திரு. எஸ்.கண்ணன் (சீராய்வு மனுதாரர்) தலைமை செயலகத்தில், உள்துறையில் பிரிவு அலுவலராக பணியில் இருந்தபோது சார்செயலர் எழுப்பிய வினாவிற்கு உரிய பதில் தராமல் அவ்வினா எழுப்பிய குறிப்பு கோப்பு பக்கம் நீக்கப்பட்டு பிரிவு அளவிலேயே காவல் துறைத் தலைவருக்கு நினைவூட்டு அனுப்பப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு மேலதிகாரியின் வினாவிற்கு உரிய பதில் வழங்காமல் பிரிவு அளவிலேயே முடிவு எடுத்த காரணத்திற்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(அ)-வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு அன்னாருடைய விளக்கம் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு மனுதாரருக்கு "கண்டனம்" என்ற தண்டனை, அரசு முதன்மை செயலாளரால் அரசாணை எண்.824, நாள் 21.07.2008ல் வழங்கப்பட்டது.

இத்தண்டனையினை ஏற்க மறுத்த சீராய்வு மனுதாரர், தலைமை செயலாளரிடம் தண்டனையினை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொண்டார். அம்மேல்முறையீட்டில் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் கூறப்படவில்லை என தெரிவித்து நிராகரிக்கப்பட்டது. அதன்பின் மனுதாரர் உள்துறை முதன்மை செயலாளருக்கு 'கருணை மனு' சமர்ப்பித்து வேண்ட, அரசு, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் இவ்வாறு கருணை மனு சமர்ப்பிக்க இடமில்லை என்பதால் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் பின்னர் மனுதாரர் மீண்டும் ஒரு சீராய்வு மனுவினை சமர்ப்பித்து தனது மனுவினை சீராய்வு செய்து தனக்கு வழங்கப்பட்ட தண்டனையினை ரத்து செய்யுமாறு வேண்ட, அரசு அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம், இவ்வழக்கினை கவனமாக ஆய்வு செய்து சீராய்வு

மனுதாரர், உயர் அதிகாரி எழுப்பிய வினாவிற்கு பதில் அளிக்காது, வேண்டுமென்றே, கீழ்படியாமல் நடந்து கொண்டார் என்ற காரணத்திற்காக அன்னாரின் சீராய்வு மனு ஏற்றுக்கொள்ள தகுதியில்லை எனத் தெரிவித்து அம்மனுவினை நிராகரிக்குமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு "கண்டனம்" எனும் தண்டனையினை ரத்து செய்ய முடிவு செய்து அவ்வாறே அரசாணை எண்.344, உள்(SC) துறை, நாள் 01.04.2010ல் ஆணை பிறப்பித்துள்ளது. தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து அரசு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

வழக்கு-3

(அரசாணை (டி) எண்.425, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள் 20.09.2010)

திரு.கோ.அரிகிருஷ்ணன் (குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்) (ஓய்வு), துணைப்பதிவாளர் (கடன்) அலுவலகத்தில் கூட்டுறவு சார் பதிவாளர் (குற்றவியல்) ஆக பணியாற்றிய போது அவரது பணியில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக அவர்மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. வரையறுக்கபட்ட நடைமுறைகளைப் பின்பற்றியபின், அரசு, விசாரணை அலுவலரின் அறிக்கையினை ஏற்று குற்றச்சாட்டு நிருபணமாவதாக முடிவு செய்து, நிருபணமான குற்றச்சாட்டிற்கு தண்டனையாக, குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.500/- வீதம் ஒரு வருடத்திற்கு பிடித்தம் செய்ய அரசு உத்தேச முடிவு செய்தது. அரசின் மேற்கூறப்பட்ட உத்தேச முடிவின் மீது குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் விருப்பம் கோரப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் அரசின் உத்தேச தண்டனையை ஆட்சேபனையுடன் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார். ஆகவே, அரசு, தமிழ்நாடு

அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை விதி 18 (1)-(C) ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம், குற்றச்சாட்டின் தன்மையையும், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் ஓய்வு பெற்றுவிட்டதையும் கருத்திற்கொண்டு, அன்னாரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.500/- என்பதற்கு பதிலாக மாதம் ரூ.200/- வீதம் ஓராண்டு காலாத்திற்கு பிடித்தம் செய்யலாம் என்ற தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.500/- வீதம் ஓராண்டிற்கு பிடித்தம் செய்யலாம் என்ற அரசின் உத்தேச தண்டனையையே உறுதி செய்யலாம் என முடிவெடுத்து, அதன்படியே அரசு ஆணை(டி) எண்.425, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள்:20.09.2010 வாயிலாக இறுதி ஆணை பிறப்பித்தது. தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து அரசு மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆ. தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்படாமை:- ஏதுமில்லை

இ. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாக தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர் காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்து ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு-12ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்புரை:-

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இட வசதி செய்து கொடுத்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கு தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்களுக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரியவேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத்துறை செயலாளர்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக, ஆண்டு முழுவதும் உண்மையாக மற்றும் திறமையாக பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு. அரங்க. செல்லமுத்து, இ.ஆ.ப.(ஓய்வு)	தலைவர்
திரு. மு. இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. த. சங்கரலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர்.கி.லெட்சுமணன், எம்.காம் ஏ.சி.எஸ்(இன்டர்) எம்.பில்., பிஎச்.டி..,	உறுப்பினர்
திருமதி.மா.சோபினி, எம்.ஏ.,	உறுப்பினர்
திரு.முகமதுஅலி ஜின்னா, பி.இ.,	உறுப்பினர்
டாக்டர். சேவியர் ஜேசு இராஜா, எம்.எஸ்.சி., எம்.பில்., பிஎச்.டி...,	உறுப்பினர்
டாக்டர்.கே.மு.இரவி, எம்.ஏ., எம்.எல்., ஏ.சி.எஸ்(இறுதி), பிஎச்.டி.(சட்டம்)	உறுப்பினர்
திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு.கே.கே.இராஜா, எம்.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ், டி.சி.எச்.	உறுப்பினர்
திரு. வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி; பிஎட்; எம்.பி.எ.	உறுப்பினர்
டாக்டர். பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி, எம்.எட்; பிஎச்.டி.	உறுப்பினர்
திரு. த.குப்புசாமி, பி.எஸ்.சி; பி.ஜி.எல்	உறுப்பினர்
திரு. க.செல்வமணி, பி.எஸ்.சி;பி.எல்:டி.பி.பி.எ.	உறுப்பினர்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-600 006.
நாள்:10.08.2011

மைக்கில் ஜெரார்டு
துணைச் செயலாளர்

பின் இணைப்பு - 1

31.03.2011- இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்

1	இணைச் செயலாளர்	1
2	துணைச் செயலாளர்	3
3	சார் செயலாளர்	20
4	கணக்கு அலுவலர்	1
5	உதவி கணக்குஅலுவலர்	1
6	ஆராய்ச்சி அலுவலர்	1
7	நூலகர்	1
8	முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர்	1
9	பிரிவு அலுவலர்	72
10	நேர்முக செயலாளர்	1
11	உதவி பிரிவு அலுவலர் மற்றும் கணக்கர்	194
12	உள்ளீடு-விளையளவு மேற்பார்வையாளர் (கணிப்பொறி)	1
13	உள்ளீடு-விளையளவு இயக்குபவர் (கணிப்பொறி)	1
14	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி)	8
15	நேர்முக உதவியாளர்	7
16	நேர்முக எழுத்தர்	12
17	உதவியாளர்	99
18	தொலைபேசி இயக்குபவர்	2
19	தட்டச்சர்	39
20	ஊர்தி ஓட்டுநர்	12
21	பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர்	23
22	மின் தூக்கி இயக்குபவர்	1
23	முதன்மை ஏவலர்	1
24	அலுவலக உதவியாளர்	92
25	காவலர்	6
26	பெருக்குபவர்	4
27	துப்புரவுப்பணியாளர்	3
28	குடிநீர் வைப்பவர்	1

பின் இணைப்பு-II
நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம்
2010-2011ஆம் ஆண்டு

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	விண்ணப்பம் பெற்ற கடைசி நாள்	தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்கள்	முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்
				ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	பி.வ(மு)	பொது	கூடுதல்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	I-மாநிலப்பணிகள்		23 07 2010										
1	உதவி மருத்துவ அலுவலர் (சித்தா) தமிழ்நாடு மருத்துவப்பணி	29 07 2009	(பெண்கள்)	9 3	2 1	1 -	12 4	16 5	2 1	19 6	61 20	3632	3412
2	உதவி மருத்துவ அலுவலர் ~~(சித்தா)~~ தமிழ்நாடு மருத்துவப்பணி		(பெண்கள்)	-	1 1	-	1 -	1 -	-	2 1	5 2		
3	உதவி மருத்துவ அலுவலர் (யுனானி) தமிழ்நாடு மருத்துவப்பணி		(பெண்கள்)	10 1	1 1	-	7 1	4 1	1 -	4 1	27 5		
4	உதவி மருத்துவர் (பொது மற்றும் சிறப்புப்பிரிவு) தமிழ்நாடு மருத்துவப்பணி	24 11.2008	29 09 2010 பொது மருத்துவம்	81	-	17	260	225	33	140	756	6055	5357
			(பெண்கள்)	25	-	1	28	37	4	42	137		
			சிறப்பு மருத்துவம்	88	-	4	99	98	1	41	331		
			(பெண்கள்)	8	-	-	8	8	-	13	37		
5	உதவி மருத்துவர் (தனித்தேர்வு) தமிழ்நாடு மருத்துவப்பணி	15.09.2009	21 12.2010			-					2107	2420	2240
6	தொகுதி-Iஆ பணி, உதவி ஆணையர் இந்து சமய அறநிலைய ஆட்சிப்பணி	20 12 2009	22 12 2010	5	1	-	5	7	-	7	25	7252	4375

பின் இணைப்பு-II
நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம்
2010-2011ஆம் ஆண்டு

வாய் மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள்								தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	மி.வ(மு)	பொது	கூடுதல்	ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	மி.வ(மு)	பொது	கூடுதல்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
21	6	3	35	54	8	-	127	11 5	2 2	1 -	16 7	29 10	2 -	-	61 24	B S M S-61	13பி.வ, 4மி.பி.வ, 2ப.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
1	3	-	5	5	1	-	15	-	1 1	-	2 2	2 1	-	-	5 4	B.A M S-5	1பி.வ, 1மி.பி.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
-	-	-	-	-	15	-	15	-	-	-	-	-	5 3	-	5 3	B.U M S-5	4பி.வ (முஸ்லிம்) பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர். 4.பி.வ, 7மி.பி.வ, 10ப.வ., 1ப.வ.(அ) காலியிடங்கள் தகுதியானவர்கள் இன்மையால் நிரப்பப்படவில்லை.
177	-	20	571	636	79	15	1498	85	-	14	287	319	41	7	753	M.B.B S-753	94பி.வ, 8பி.வ.(மு), 27மி.பி.வ, 4ப.வ பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர். 3பழ(பொது மருத்துவர்), 7பொதுப்போட்டி, 60ப.வ, 1பி.வ(மு), 74மி.பி.வ, 68ப.வ. 4பழ சிறப்புபரிவு மருத்துவ காலியிடங்கள் தகுதியான நபர்கள் இன்மையால் நிரப்பப் படவில்லை
								54	-	9	121	156	21	4	365		
49	-	-	65	132	2	5	253	25	-	-	30	60	-	2	117	M B B.S with (Speciality)-117	
								9	-	-	10	34	-	1	54		
							2200	394	43	12	487	1048	78	45	2107	M.B B S-2107	-
15	3	-	13	20			51	5	1	-	7	12	-	-	25	B.L-25	2மி.பி.வ, 5பி.வ பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்

பின் இணைப்பு-II
நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம்
2010-2011ஆம் ஆண்டு

வரிசை எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	விண்ணப்பம் பெற்ற கடைசி நாள்	தெரிவு முடிவுகள் தெரிவிக்கப்பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை								பெறப்பட்ட விண்ணப்பங்கள்	முதன்மைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்
				ப.வ	ப.வ(மு)	ப.கு	மி.பி.வ	பி.வ	பி.வ(மு)	பொது	கூடுதல்		
(1)	(2)	(3).	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
7	பிரிவு அலுவலர் (மொழிபெயர்ப்பு) சட்டத்துறையில் தமிழ்ப்பிரிவு, தமிழ்நாடு பொதுப்பணி	17 02.2010	11 02.2011 (பெண்கள்)	-	1	-	-	-	-	1	2	47	20
8	**II-சார்நிலைப் பணிகள்** தொகுதி-VII-ஆ பணி நிர்வாக அலுவலர் நிலை-III இந்து சமய அறநிலையத்துறை	29 07 2009	21 04.2010 (பெண்கள்)	4 1	1 1	-	6 2	6 2	-	6 2	23 8	16388	14774
9	தொகுதி-VIII பணி நிர்வாக-அலுவலர் நிலை-IV இந்து சமய அறநிலையத்துறை	29.07.2009	02.06 2010 (பெண்கள்)	7 1	2 -	-	10 2	13 3	-	15 4	47 10	48858	40301
10	இளநிலைக் கட்டடக் கலைஞர் பொதுப் பணித்துறை தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி	16.04.2009	18.06 2010 (பெண்கள்)	2 1	-	-	1 -	1 -	-	2 1	6 2	204	182
11	உந்தூர்தி ஆய்வாளர் நிலை-II தமிழ்நாடு போக்குவரத்து சார்நிலைப்பணி	24.02.2009	14.10 2010 (பெண்கள்)	15 5	-	1 -	15 5	20 6	2 1	23 7	76 24	2669	1675
கூடுதல்											3466	87525	72336

பின் இணைப்பு-II

நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட பதவிகளின் விவரம்

2010-2011ஆம் ஆண்டு

வாய் மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்								இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவாகள்								தெரிவு செய்யப்பட்டவர்களின் கல்வித் தகுதி	குறிப்பு
ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	மி.வ(மு)	பொது	கூடுதல்	ப.வ	ப.வ(அ)	ப.கு	மி.பி.வ	பி.வ	மி.வ(மு)	பொது	கூடுதல்		
(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)
2	-	-	-	3	-	-	5	1	-	-	-	1 1			2 1	B.L-2	-
10	5	-	15	21	-	-	51	3 1	2 1	-	8 3	10 5	-	-	23 10	Degree-16 P.G.Degree-7	4பி.வ, 2மி.பி.வ் பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
15	6	-	30	42	-	3	96	8 1	2 1	-	13 4	22 8	-	2 -	47 14	S S.L.C-4, HSC-12, Degree-19, P.G.Degree-12	1ப.வ, 3மி.பி.வ, 10பி.வ பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
7	-	-	4	6	-	1	18	2 1	-	-	1 -	3 3	-	-	6 4	B.Arch-4, M.Arch-2	2பி.வ. பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
32	-	1	43	66	7	1	150	16 6	-	1 -	20 7	35 9	2 1	1 1	75 24	B.E-31 D.M.E-41 D.A.E-3	பொதுப் போட்டியில் தகுதியுடைய பார்வையற்ற நபர் இன்மையால் 1 காலியிடம் நிரப்பப்படவில்லை. 1ப.வ, 5மி.பி.வ, 15பி.வ பொதுப் போட்டியில் தெரிவு பெற்றனர்
							4479								3226		

பின் இணைப்பு -3

(தொடர்புப்பகுதி - 1)

2010-2011 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு விவரங்களின் அட்டவணை

இனங்கள்	(ரூபாய் ஆயிரங்களில்)
அ) வருவாய்	
விண்ணப்பப் படிவம் விற்பனை	4,21,26
துறைத் தேர்வுகள் கட்டணம்	1,23,70
நேரடி தேர்வுகள் கட்டணம்	5,60,57
இதர வருவாய்	12,22
கூடுதல்	**11,17,75**
ஆ) செலவு	
அடிப்படைச் சம்பளம்	12,45,80
அகவிலைப்படி	4,08,06
மருத்துவச் செலவுகள்	13,22
ஏனையப் படிகள்	11,17
பயணச் சலுகைகள்	5,86
அஞ்சல் செலவுகள்	2,00
பயணச் செலவுகள்	9,39
தொலைபேசி கட்டணங்கள்	5,20
ஏனைய சில்லரை செலவுகள்	24,14
தொழில்சார் சிறப்புப்பணிகளுக்குத் தொகை கோருதல்	9,76,12
பரிசுகள் மற்றும் விருதுகள்	2
வாடகை/வரிகள்/தண்ணீர் மற்றும் பராமரிப்பு	5,62
விளம்பரச் செலவுகள்	2,94,99
இயந்திரம் பராமரிப்பு மற்றும் வாங்குதல்	2,36
மோட்டார் வாகன எரிபொருள் செலவு, வாங்குதல், பராமரிப்பு	15,61
கூலி	64,32
மின்சாரக்கட்டணம்	16,05
கணிபொறி	35,41
கட்டணம் திருப்பி கொடுத்தது	7
கூடுதல்	**31,35,41**

பின் இணைப்பு-IV

(தொடர்பு பகுதி-I)

2010-2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	பதவிகளின் எண்ணிக்கை	காலியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்கள்
1	உதவி இயக்குநர், சமூக நலத்துறை, தமிழ்நாடு பொதுப்பணி	18.06.2010	1	2	2,437
2	குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், சத்துணவு திட்டம், தமிழ்நாடு பொதுப்பணி	18.06.2010	1	30	
3	கால்நடை உதவி மருத்துவர், கால்நடை அலகு, பால்வளத்துறை, தமிழ்நாடு பொதுப்பணி	18.06.2010	1	7	413
4	ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு	14.07.2010	7	661	32,462
5	கிராம நிர்வாக அலுவலர், தமிழ்நாடு அமைச்சுப்பணி	21.07.2010	1	3484	10,44,119
6	விடுதி கண்காணிப்பாளர் பணியுடன் கூடிய உடற்பயிற்சி அலுவலர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப்பணி	22.09.2010	1	10	747
7	புள்ளியியல் உதவியாளர், தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப்பணி	08.11.2010	1	12	5131
8	வட்டார சுகாதார புள்ளியியலர், தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப்பணி	08.11.2010	1	49	
9	சிறப்பு உதவியாளர், ஊழல் கண்காணிப்பு மற்றும் குற்றத்தடுப்பு இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு அமைச்சுப்பணி	08.11.2010	1	4	1,553

வ. எண்	பதவி மற்றும் பணியின் பெயர்	அறிவிக்கை நாள்	பதவிகளின் எண்ணிக்கை	காலியிடங்களின் எண்ணிக்கை	பெறப்பட்ட விண்ணப்பங்கள்
10	தொகுதி-VI பணி, (வன பழகுநர்) தமிழ்நாடு வன சார்நிலைப்பணி	24.11.2010	1	80	10,903
11	தொகுதி-I பணிகள் (துணை ஆட்சியர்-56, காவல் துணை கண்காணிப்பாளர்-29, உதவி இயக்குநர்(வணிகவரி)-28, துணைப்பதிவாளர்-7, உதவி இயக்குநர்(ஊரக வளர்ச்சி)-10, கோட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு அலுவலர்-1	29.12.2010	6	131	1,49,687
12	ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தேர்வு-I	30 12.2010	40	6695	4,18,391
13	உதவி அரசு வழக்குறைஞர் நிலை-II, தமிழ்நாடு பொதுப்பணி	12.02.2011	1	83	5,410
14	தொகுதி-IV பணிகள் (மாற்றுத் திறனாளிகள் மட்டும்) இளநிலை உதவியாளர்-145, தட்டச்சர்-106, சுருக்கெழுத்து தட்டச்சர்-17	19.02.2011	3	268	13,492
கூடுதல்			66	11,549	16,84,745

பின்இணைப்பு-V
(தொடர்புப் பகுதி-II)

